# மௌனமே வாழ்வாக...



கவிதைத் தொகுதி

க. சுதர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title- mavunamay valvaga
subject- (collection of poems)
Author- K.Sutharsan
Address ' Ambikaivasam', 'Brahmins Lane'. Thumpalai West
First Edition - 2008 October 19
Printers - New S.P.M Offset Printers,
V.M. Road, Point Pedro.
Coverdesign - Theepan Arts

Prize Rs:-100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமான்களும், வைத்தியர்களும், சோதிடர்களும், இதர விற்பன்னர்களும் நிறைந்த தும்பளை மேற்கில் கரைகாணா கல்வி என்னும் கடலிற்கு கலங்கரை விளக்கமாக பாடசாலை அமைத்த தன்னிகர் அற்ற பெருந்தகை திரு.வே.சிதம்பரப்பிள்ளை சீனி வார்த்தியார் அவர்களிற்கு........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

ஒவ்வொரு மனிதனுள்ளும் பல்வேறு வகையான ஆற்றல்கள் புதைந்து கிடக்கின்றன. சூழல் கவின்நிலை என்பன சரியாக அமையும்போது அவை வெளிப்படுகின்றன.எமது கல்லூரி மாணவன் சுதர்சன் கவிதை புனையும் ஆற்றலை தனது பாடசாலைக்காலத்திலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் ஒரு பகுதியாக "கல்லும் சொல்லாதோ கவி" எனும் தலைப்பில் கவிதைகளை வெளியிடுவதற்கான ஓர் வாய்ப்பை எமது பாடசாலைஅவருக்கு ஏற்படுத்தி

அவரது நெஞ்சைத்தொடும் இச்சின்னஞ்சிறிய கவிதைகளின் தொகுப்பு அவரது ஆக்கத்திறன் வெளிப்பாட்டின் ஒரு பகுதியே. அவர் மேலும் வளர்ச்சியடைந்து எம் மத்தியில் ஒரு கவிஞனாக மிளிர எனது மனப்புர்வமான வாழ்த்துக்கள்.

திரு.நா.தெய்வேந்திரராஜா
அதிபர் யா/ஹாட்லிக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிதையையும், கவிஞனையும் பிரித்து நோக்க முடியாது. கவிதையே கவிஞன், கவிஞனே கவிதை. கவிஞனின் உணர்வுகளின் பிரவாகமாக, அனுபவத்தின் ஒட்டுமொத்த பிரதி பலிப்பாக, உள்ளார்ந்த ஞானத்தின் வெளிப்படாக,ஆவேசத்தின் அறை கூவலாக, அடி மனதில் உறைந்து கிடக்கும் சூக்குமமான வேட்கைகளின் கொப்புளிப்புகளாக கவிதையைக் கொள்ளமுடியும். பிரசவத்தின் பின், தாய்மை அனுபவிக்கின்ற அமைதியையும் புளகாங்கிதத்தையும் கவிதையின் பிறப்பு கவிஞனுக்கு வழங்குகின்றது. கவிதையிலும் ஒரு கருவைத்தான் கவிஞன் தேக்குகின்றான். கருச் சிதைவு ஏற்பட்டு விடாமல் வார்த்தைகளாலும் வடிவங்களாலும் வலுக் கொடுத்து அதன் நிலைப்புக்கு வழிகோலுகின்றான். தடைகளை உடைத்து, தளைகளை அறுத்து, அந்தரங்கம் என்ற போர்வைகளைக் கூட விலக்கி, பிரபஞ்சம் தொடர்பானஅகவயமான தரிசனத்தால் பெற்றுக் கொண்ட ஞான நிலையினூடாக கவிஞனின் சிருஸ்டி ஆரம்பமாகின்றது.

ஒரு கவிஞனின் உணர்வுக்கும் சாமான்யமான ஒருவனின் உணர்வுக்கும் இடையில் வேறுபாடு உண்டு. சாமான்ய மனிதனின் பார்வையில்,ஜடம் ஜடமாகவே மட்டும் தென்படும். ஆனால் கவிஞன் ஜடத்திலும் உயிரோட்டத்தைக் காண்கின்றான். ஜேம்ஸ கேட்ஸ், பார்சிவல் என்ற ஆங்கிலக் கவிஞன் உரோசா மலரின் அழகை,

" ஓ உரோசா மலரே
அதியுன்னத அழகு மலரே
வசந்தத்தின் மா வண்ண புஸ்பமே
ஓ உரோசா மலரே
சொர்க்கம் தரும் ஆனந்தமே

என வர்ணிக்கும போது, அம்மலரின் வசந்தத்தைக் காண்கின்றார். சொர்க்க ஆனந்தத்தை உவக்கின்றார்.கவிஞனுடன் மலர்கள் பேசும், புன்னகைக்கும். பாவேந்தர் பாரதி தாசனை கண்டு முல்லை முறுவல் பூக்கின்றது.

" மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன் குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சை
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்தது
குளுக்கென்று சிரித்த முல்லை
மலர்க் கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே

இங்கு சோலையின் வனப்பும் தென்றலின் குளிர்மையும் கவிஞனைப் பரவசப்படுத்துகின்றன. பச்சைப் பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்த முல்லை குலுக்கென்று சிரித்ததாம். பட்டுடை தரித்து நளினமாக சிரிக்கும் இளநங்கை ஒருத்திக்கு முல்லையை உவமித்து நயம் காண்கிறார் கவிஞர்.இத்தொகுதியில் இடம்பெறும் சுதர்சனின் கவிதைகளை அலசும் போது அவற்றில் ஒரு பொதுப்படையான பண்பு இழையோடுவதை அவதானிக்கமுடிகின்றது. சமுக அநீதிகள் சமுக சீரகேடுகள் போன்றவற்றை விமர்சிக்கும் பாங்கில் அவை அமைகின்றன. ஒழுக்கபிறழ்வுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகோலும் வகையில் அமையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி 'மெகாதொடர் முன்' என்ற கவிதையுடாக சாடும் அதேசமயம் தீமையின் மத்தியிலும் நன்மையை எதிர்நோக்கும் ஒருவித வேட்கை

'சேற்றினருகே நின்றாலும்
செந்தாமரை மலராதா என
கிழக்கில் ஓர் ஒளி சுடராதா என
காத்திருக்கிறேன் '

ஏன்ற இறுதி அடிகள் ஊடாக பிரதிபலிக்கின்றது.ஆலயத்தில் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் கர்ப்பக் கிரகத்தில் விக்கிரகம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. சுதர்சனின் பார்வையில், கடவுளுக்கும் சமூகத்தில் பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பு என்ற பெயரில் கடவுளும் சிறைக் கைதிதான். மனிதர் மத்தியில் கடவுளின் பரிதாப நிலையை **நிலவு சொல்கின்றது**" என்ற கவிதையில்.

"எம்மைப் படைத்தவன் எங்கே
அதோ கருவறையில் கதவுகள் அடைக்கப்பட்டு காவலில்
வைக்கப்பட்டிருக்கின்றான்"
என்ற வரிகள் மூலம் உணர்த்துகின்றார்.

**"சாதீ" என்ற கவிதையில்**

"எண்ணம் கொண்டு
வண்ணமாய் வரைந்த
வனப்பு மிக்க உலகில் – தமக்குள
வர்ணம் பூசி வக்கிரமாக்கியது யார்?"

என வினவுவதன மூலம் வர்ணாச்சிரம தர்மம் சாடப்படவில்லையா? மேலும் இப்பாகுபாடு அழிவுக்கான அனல் என்ற பொருள் பட சா – ***தீ*** சாவுக்கான ***தீ சாதீ*** என கவிதை நயம்பட தலைப்பிடப்பட்டுள்ளமை பாராட்டதலுக்குரியது.கவிதையின் இரு முக்கிய பண்புகளான வடிவம், பொருள் என்பவை பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். வடிவத்தில் நாட்டம் செலுத்தப்படும் போது பொருள் குன்றி கவிதையின் குறிக்கோள் இழக்கப்படுவதும், பொருளில் நாட்டம் செலுத்தப்படும் போதும் யாப்பிலக்கணம் பொய்த்து கவிதையின் இலட்சணமே மழுங்கிவிடுவதும் பல சந்தர்ப்பங்களிலே ஏற்படுவதுமுண்டு. சுதர்சனின் பெரும்பாலான கவிதைகளில் இவ்விரு பண்புகளும் கணிசமான அளவு திருப்திகமைான அளவில் பேணப்பட்டிருப்பதை நோக்க முடிகின்றது.

இளம் பராயத்தவராய் இருப்பினும் சுதர்சனின் இள நெஞ்சில், சமூக அநீதிகள், அடக்கு முறைகள், இழிநிலைகள் தொடர்பில் ஆவேச உணர்வு மேலோங்கி நிற்பதுவும், வாசகன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சொற்பதங்கள் கையாளப்பட்டிருப்பதும் அவரின் அசாதாரண ஆளுமைக்கு ஆதாரமாகின்றன.இந்த இளம் கவிஞனுக்கு பிரகாசமான எதிர் காலமுண்டு என உறுதியாக நம்புவதுடன், அவா மேலும் கவிதைகள் யாத்து தமிழ் உலகில் தம் நற்பணியை தொடர்வார் என வாழ்த்துகின்றேன்.

திரு.சுந்தரேசன்
சிரேஷ்ர விரிவுரையாளர்
ஆங்கிலத்துறை.யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மௌனமே வாழ்வாக எனும் கவிதை தொகுதி இன்று நாம் வாழ்கின்ற வாழ்க்கையை குறிக்கின்றது. இந்த நெடிய மௌனம் அர்த்தமற்றதாக கூட இருக்கலாம். ஆனால் அது அவசியமானது.நான் கவிதையில் பேசியது வாழ்க்கையைவிட்டு தொலைதூரத்தில் இருக்கும் ஒன்றல்ல. பேசப்பட்டவர்கள் எமது உறவுகள். அவலம் ஒன்று கண்கள் வழியாக நுழைந்து மனதுள் தங்கிவிடுகிறது.ரௌத்திரம் பிறக்கிறதுஇ இது வார்த்தைகளாக கொட்டப்பட்டால் வேகம் தணிந்து விடுகிறது. ஆனால் எழுத்துவடிவம் பெறும் போது வேகம் தணிவதில்லை. □ எலலோரும் மாதிரியே இருந்துவிடு இதைப்பற்றி உனக்கென்ன அக்கறை ? என்று கேட்கக்கூடாது. நான் ரத்தமும் சதையோடு உணர்வுகளால் பின்னப்பட்டவன். என்னுடைய உணர்வுகளின் வெளிப்பாடே கவிதை. வுாழ்க்கை ஒரு நாடகமாயினும் என்னால் பிறரைப்போல நடிக்கமுடியாது. என்னுடைய உணர்வை வெளிப்படுத்த முனைகிறேன். எவ்வளவுதூரம் என்பதை வாசகர்தான் கூறவேண்டும்.கவிதைக்கு கற்பனை அழகு சேர்க்கலாம்.ஆனால் நான் உண்மையை ஆராதித்திருக்கிறேன்.

" என்தேசம் பற்றி
ளரிகையில் பிடில்
வாசிக்க நான் அந்த
நீரோவை
நீசன் அல்லன்
உடன்பிறந்தவன்
பசியால் அழும்போது –சாப்பிட
பீசாகட் கேட்க நான் பித்தனுமல்லன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயில் ஏன் பாடுகிறது என்றால் பாடும்போது அதனுடைய உள்ளத்தில் ஏற்படுகின்ற களிப்பானது அதனுடைய சூழ்நிலையின் தன்மையை இன்பமயமாக்குகின்றது. குயிலுக்கு சொன்னதுதான் எல்லாக்கலைகளுக்கும். பாடுகிறவன் இசைஞன் கதாசிரியன் கவிஞன் எல்லோரும் குயிலைப்போலத்தான்.

எனக்கு கவிதையில் அரிச்சுவடி கற்பித்து இன்றுவரை ஊக்குவிக்கின்ற மதிப்பிற்குரிய ஆசிரியை **கல்யாணி நமசிவாயம்** அவர்களிற்கும் 'கல்லும் சொல்லாதோ கவி என களம் தந்த கல்லூரி அன்னைக்கும் என் படைப்புக்களை விமர்சித்து வழிகாட்டுகின்ற **சிவஸ்ரீ' சோமாஸ்கந்தராஜகுருக்கள்** அவர்களிற்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

என் படைப்புக்களை பிரசுரிக்கின்ற **ஜீவநதி அஞ்சலி வழி** ஆகிய சஞ்சிகைகளிற்கும் **யாழ்.தினக்குரல்** பத்திரிகைக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இம்முயற்சியில் என்னை நெறிப்படுத்தி நூல் வெளிவரகாரணகர்த்தாவாக செயற்படும் மதிப்பிற்குரிய ஆசிரியர் **பா.இரகுவரன்** அவர்களிற்கு நன்றிக்கடன்பட்டுள்ளேன். முகப்பு அட்டைபடத்தை அழகுற வரைந்து தந்த **திரு.ஜெயதீபன்** ஆசிரியர் அவர்கட்கு
நன்றி. என் பெற்றோருக்கும் நன்றி. என்னை எழுதுமாறு உரிமையோடு தூண்டுதலளிக்கின்ற அன்பு சகோதரர்களான **சுதாகரன் உமா சிவதர்சினி சுபஹரி அபிராமி** ஆகியோருக்கும் நன்றிகள். என்னுடைய நண்பர்களிற்கும் நன்றி.

என் இதய வீட்டின்மீது
கற்களை வீசினாலும் -என்
மனமுற்ற ரோசாசெடிகளை
பரிசளிக்க காத்திருக்கிறேன்.

**அன்புடன்**
**சுசுதர்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை வழிநடத்தும்



என் தேவனே !
நீ படைத்த
பூந்தோட்டம் எனும்
பூவுலகில்
நானும் ஓர் மலர்தான்
திருடப்பட்ட என் நறுமணத்தை
மீட்டுக் கொடு
உறைந்து போன என்தேனை
உசுப்பிவிடு
வார்த்தைகள் தேனாய்
தெறிக்கவேண்டும்
தழல் என வரும்
சுடு சொற்களை
சகிக்க சக்தி கொடு
மரம் போல நான்
மரித்த பின்னும் பிறருக்கு
மகிழ்ச்சி கொடுக்க வழிசெய்
அகம்பாவத்தின் நிழலைக்கூட
என்மீது படிய விடாதே
எங்கிருந்து வந்தேனோ
அங்கேயே – உன்
பாதத்தருகே எனக்கும் ஓர் இடம் கொடு
வாழ்வு முழுவதும் என்னை வழி நடத்திடு.

2008. 09. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனியாவது ..........

தேவன்
அன்று பூமிக்கு வந்தார்
கல்லால் எறிந்தோம்
கனிவோடு திரும்பி வந்தார்
சிலுவையில் ஏற்றினோம்
சினமே இன்றி
மீண்டும் வந்திருக்கிறார்
இனியாவது நாம் ...............

23.11.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னோடு நான்

என் பிறப்பு என்பதும்
பிற உயிர் ஜனிப்பு போலவே ஓர்
மோதுகையோடு ஆரம்பித்தது
வளர்ந்து வருகையில்
படிப்பில் ஆரம்பக்கட்டமாக
'ஸ்கொலசிப்', பின்
ஆறாம் தரத்தில் சேர என
நீண்டது இன்று
'ஏ.எல்'இல் உச்சம் கண்டது
நாளை திருமணச்சந்தையில்
நான் ஏலம் போவேன்

இப்போது
என்னை பிடித்து கொண்ட
மிருகம் எங்கோ ஒளித்துவிட்டது
வீதிகளில் விம்முகின்ற
துயரங்கள் என் செவியை ஈரமாக்கும்
கண்ணீர் சிந்தும் கண்களை நோக்கி – என்
கரங்களும் நீள்கின்றன - இந்த
அவலம் கண்டு மீண்டும்
மிருகம் முரண்டு பிடிக்கிறது
மனமேடைக்கு திரை போடுவேன்
குழந்தையின் குதூகலத்தோடு
குதிக்க ஆசை பிறந்தது
வயது வரம்பு எனக்கு
வேலி போடும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுவரை பருகிய
கற்பனைத்தேன்
இப்போது எனக்கு
கசக்கிறது

என்னுடனான மிருகத்தினது
மோதல் உச்சம் பெறுகிறது
பரஸ்பரம் ஜெயிக்க
முயன்றும்
முடிவின்றி தொடர்கிறது
மரணம் வரை.
என்னை ஏன்
முரணணி வித்தகன்
சோபோகிளிஸ் நாடகத்தில்
சேர்க்கவில்லை?
ஷேக்ஸ்பியர்
பாத்திரமாக
படைக்கவில்லை
இருவருடனும்
முரண்படப்போகிறேன்.

23.04.2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனமாற்றம்

அப்போதெல்லாம்
ஒற்றைப் பூக்களை கொய்து விடுவேன்
இப்போது ......
அவ்வாறில்லை
பூக்களை உடன்கட்டை ஏற்றுவதில்
உடன்பாடில்லை எனக்கு
மலர்களின் இராச்சியத்தில்
குற்றவாளி கூண்டில்
முட்களின் மீது நின்று
காற்றை வைத்து வாதாட
தைரியமில்லை.


அஞ்சலி,வழி
யா/ஹாட்லிக் கல்லூரி

2008. 09. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரங்களே வாழ்வாக....



நல்லுலகிற்கு அழைத்து
வந்த பெற்றோர்
நல்ல நண்பனாய்
வாய்த்த அண்ணன்
காலப்படிப்பகத்தில்
கிடைத்த சகோதரிகள்
என்னை எனக்கு
அறிமுகம் செய்த
ஆசான்கள்
நான் முகம் பார்க்கும்
சமூகக் கண்ணாடி
என்னை வளர்த்துவிடும்
எதிரிகள்
கம்பளம் விரிக்கும்
பசுந்தரைகள்
தலை துவட்டும் காற்று
கீதம் பாடும் குயில்கள்
குடைபிடிக்கும் காளான்கள்
மழை கொட்டிய
முற்றமாய் ஈரமான மனசு
வேதங்கள் சொல்லாதவை
என் வாழ்வில் நிசமாய்

17. 08. 2008. யாழ் தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் மனம்

உப்புக் காற்றில் ஊறியபோதும்

காலக் கண்ணீரில் கலந்த போதும்

துருப்பிடிக்கவில்லை என் இரும்பு மனம்

காரணம்.......


பழுக்கக் காய்ச்சி வைத்திருக்கின்றேன்

கவலைகளை எரித்து.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி



பௌர்ணமி நாள்
உன் மௌன இருளால் இருண்டுபோன
என் இதயம் ஒளிபெற்றது.
மாசற்ற நிலவே உன்னில்
களங்கமில்லை
பார்ப்பவன் கண்ணில்தான்..........
பால் மழை பொழிந்தாயே - அக
இருள் ஓடி மறைந்தது
எண்ணப் பயிர்கள் செழித்தன
நின்று போன மின்னொளிதான்
நிலவே உன்னை ரசிக்க வைத்தது.
சுழற்சி முறையில் "பவர்கட்" போடும்
சுந்தரமே
உன் அழகே அழகு
உன் மதியே மதி
உனக்குக் கட்டணம் கட்டுவதென்றால்
கவிஞன் மட்டுமல்ல.........
கனவானும் கடனாளிதானே!

2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் வசப்படும்



பட்டாம் பூச்சி
பரவசமாக உலவுகிறது
பறவை
பாரினைச் சுற்றிக் களிக்கின்றது

விஞ்ஞானம்
விண்ணைத் தொட்டு விந்தை
புரிகிறது
நீ மட்டும்......
சிறகுகளை விற்று விட்டு
பறக்க ஆசை கொள்கிறாய்!

கனவுகளில்
காலத்தைக் கரைக்கிறாய்
சும்மா இருந்து கொண்டு
சுகம் வேண்டும் என்கின்றாய்
வாழ்வென்ன அடிமையா?
உன்காலில் மண்டியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா !

காற்றில் ஏறு,

கனவுகளைச் சமை

தூக்கம் குறை

ஊக்கம் நிறை

நெஞ்சில்

நம்பிக்கை எனும் ஈரம் விதை

வாழ்வு என்ன

உனக்கு

வானமும் வசப்படும்

ஜீவ நதி,

வழி 2008 யா/ ஹாட்லிக் கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

மனத்தீவில் கலவரம்
மௌனச்சிறையில் நான்
பிணையெடுக்க வார்த்தைகள் வரவில்லை
சிறைக்காவல் நீடிக்குமா ?
மௌனம் என்பது
மொழியின் மரணம்
வெற்று ஊர்வலம்
என் அகராதியில்
மௌனம் சாதித்தல் என்பதை விட
மௌனத்தால் சாதித்தல் என்பதற்கே
அர்த்தம் பகிரப்படும்.

12.12.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தாண்டே வருக

ஆறு ஆறிப்போக
ஏழு எழுகின்றது - புது
எழுச்சி ஊட்டுவதற்காய்
பழைமைக்களை அகற்றி
புதுமை விதையிட்டு
உழைப்பை உரமாக்கி
வியர்வை நீர்ப்பாய்ச்சி
காலமென்னும் வயலில்
அறுவடை செய்ய புத்தாண்டே வருக!

**01.01.2007** **யாழ் தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிற்பிகள் சிறைக்குள்

தெருவோரம்
சிட்டி விற்கும் சிறுமி
பிறர் வாழ்வில் ஒளியேற்றும்
அவள் வாழ்வு இன்னும் இருட்டில்தான்
ஏடு தூக்க வேண்டிய வயதில்
படும் பாடுகள் எத்தனை ?
பலசரக்கு கடையில்
பணிபுரியும் பாலகனின்
கனக்கும் மனதை என்ன எடை போட்டு
சீர்தூக்கி சமன் செய்வீர் ?
சிறுவர் உரிமை பற்றி
"செமினார்" நடத்துவோரே
நீலக்கடலின் கரையில் நின்று
நீண்ட நேரமாக
நீச்சல் பற்றி பேசி விளைந்த
பயன் என்ன ?
இனியாவது வாருங்கள்
யதார்த்தக்கடலில் கால்கழுவி
கறைபட்ட கால்களை கழுவிக்கொள்ளுங்கள்
எதிர்காலத்தை செதுக்கபோகும் சிற்பிகள்
சிறைக்குள்தான்.........

**01.10.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரசி ருசி வசி

இயற்கையின் இன்பக் கடலில்
காலங்கள் போடும் கோலங்கள் ரசி
தாயின் அன்பின் மொழியில்
கடவுளின் உருவைக் கண்டு ரசி
விண்ணிலும் மண்ணிலும்
புன்னகைக்கும் பூக்களை ரசி
பு(அ)னலின் புனிதத்தை ரசி
வேய்ங் குழலின் இசையை ரசி
தழுவும் தென்றலை ரசி
தோல்வி ஓதும் வேதத்தை ரசி
பாடம் புகட்டும் பகைவனை ரசி
காயத்தை ஆற்றும்
நேயத்தை ரசி
ரட்சகன், ராட்சதன் ஆக வேண்டாம்.
அழகை ரசிக்கும் ரசிகனாய் இரு
ரசி, ரசித்தே நீ வசி.

06.06.2007





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் ஒருவனே உரிமையுடன் ஓர்மடல்



நாக் கூசும் காரணங்களுக்காக

நட்புபூணும் உலகில்

நட்புக்கு இலக்கணம் வகுத்தவன் நீ

அன்பை தர மறுக்கும் கஞ்சர்களுக்கும்

தாராளமாய் அள்ளி வழங்கிய தயாள குணத்தவனே!

பழமைகளுக்குள் புதைந்தவனை புதுப்பித்து புது ரத்தம் ஊட்டினாய்.

சங்கத்தலைவன் போல் "புதன் வருவேன்"என்றவனே!

பல திங்கள் கடந்ததுவே!

புற நானுற்று கோயிலை

பூசிக்கச் சென்றவனே!

தேசங்கள் தாண்டியும்

நேசங்கள் வாழும்.

நீ வரைந்த சுவடுகள் வழியே

எனது ஈர விழிகள்.

09.05.2007

கல்லும் சொல்லாதோ கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெகா தொடர் முன் .......

ஒரு நாயகன் அவனுக்கு
இரு நாயகிகள்
கொடுமைப்படுத்தும் மாமியார் - இதை
கண்டு கொள்ளாத கையாலாகாத கணவன்
மருமகள் வஞ்சகக்காரி
நாயகியும்
அவளை சார்ந்தவர்களும்
அடிக்கடி அழுது புலம்பவேண்டும்
பின்னணியில சோககீதம்
உச்ச பரபரப்போடு 'டிக் டிக்',
'தொடரும்' , 'மின்னும்' , 'வருவாள்'
இப்படி ஏதாவது கூறி முடிக்கலாம்
ஒன்றிப்போகும் உங்கள்
கண்ணீரே அவர்களுக்கு
காசாகும் - அன்று
சோக காவியங்கள்
இலக்கிய நயம் கொண்டன
மெகா தொடரின்
இலக்கு நயத்தை கொள்வது
அதன் முன்
மணிக்கணக்கில்
மண்டியிடும் நம்மவர்கள்
குப்பைத்தொட்டியில்
எச்சில் இலை தேட உதவும்
ஊடகங்கள் நேரத்தை நிரப்பும்
நான்
சேற்றினருகே நின்றாலும்
செந்தாமரை மலராதா என
கிழக்கில் ஓர் ஒளி சுடராதா என
காத்திருக்கிறேன்.



08.07.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமே வாழ்வாக......

என்னை ரணப்படுத்தும்
மொழிகள் வேண்டாம் -பதிலாக
விழிகளுக்கு
காந்த சக்தியை கொடு
இரும்பாக, கரும்பாக
காட்சிகளை தேடவிடு
கதைக்க தெரிந்தவனுக்கு
கதைக்காதிருக்கவும் தெரியவேண்டும்
ஆலயவாசலில் - வீண்
அரட்டைகள் தவிர்
கதறும் ஒலிபெருக்கியை
கழற்றி வை
ஆனந்த தாண்டவக்கோனை
அடக்கி வைக்காதே
ஆழக்கடல்
ஊழித்தாண்டவமாடிய போது
ஆழ்ந்த அமைதியும்
அர்த்தமற்று போயிற்று
ஆழ்ந்த அமைதியில்தான்
ஆண்டவனின் குரலை கேட்கமுடியும்
எரிமலைகள் இல்லாத தேசத்தில்
என்மனம் எரிமலையாகாதிருக்க
விழிகளை உணர்வுகளை
வெளியேற்றும் வழிகளாக்கிவிடு
வார்த்தைகள் வேண்டாம் - மௌனம்
வரைந்த கோலங்களே
போதும் என
நாமும் நாட்களை நகர்த்துகின்றோம்

09.04.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சம்பிரதாயம்


தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து
தீபாவளி கொண்டாட ஆசை எங்களுக்கும்
இரவி இருந்தும் எங்கள் 'இருப்புக்கள்' இன்னமும்
இருட்டில்தான்
பகலோடு பறிக்கப்பட்டுவிட்ட பொழுதுகள்
நம்பிக்கைக்கு பாத்திரங்களே இல்லை
நாணயமும் இல்லை
நண்பனே .....!
வாழ்த்து அட்டைகள்
வரைந்து
வாழ்த்த மறந்தாலும் - உன்
வாழ்விற்கு
அடையாள அட்டைகள்
அவசியமானது
தின்பண்டங்களை தவிர்த்தாலும்
ஒருவரை ஒருவர் கொன்று
தின்னமாட்டோம் என
தீர்மானித்துக் கொள்வோம்
கடைகளில்
'பிரச்சனைகள் தள்ளுபடி' எனும்
வாசகத்தை தேடமுடியாதுதானே !
'சுடர்கின்ற தீபங்கள் உங்கள் வாழ்வில்
ஒளியேற்றட்டும்' என சம்பிரதாயபூர்வமான
வாழ்த்துச்செய்தி இந்த வருடமும்
வழமை போல...



27.10.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவு சொல்கிறது

வானக்கடலில்
நீந்துகின்ற விண்மீன்களே
உங்களுக்கு
நான் சொல்லிக்கொள்வது....
நீங்களும்
என்னைப்போல
நிசப்தமாக இருந்து விடாதீர்கள்
நிலவில் களங்கமென்று
நீசர்கள் நிர்ணயித்துவிடுவர்
ஆதலால் உங்கள் கண்களையாவது
சிமிட்டுங்கள்
எம்மை படைத்தவன் எங்கே ?
அதோ கருவறையில் கதவுகள்
அடைக்கப்பட்டு காவலில்
வைக்கப்பட்டிருக்கிறான்
உஷ்....சற்றுப்பொறுங்கள்
மனிதமிருகம் நம்மை நெருங்குகின்றது
மேகத்தை இழுத்து
போர்த்துங்கள்
அதன் பெருந்தாகத்திற்கு
தண்ணீரை வாரி இறையுங்கள்.

27.01.2008

யாழ் தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதீ

சகோதரனை
சத்துருவாய்
காணும்
கலிகாலமிது

உடன் பிறக்காதவனுக்கு
உலை வைப்பதில்
என்ன அதிசயம் கண்டீர்
ஏன் இங்கு வீண் தர்க்கம்
என்று தீரும்
இந்த ஏக்கம்- நம்மை
எழுதியவனுக்கே அது தீர்க்கம்
என்று இறக்கும்
இச்சாதி வெறி
அன்று பிறக்கும்- உலகில்
நீதி நெறி

சந்திக்கு ஒரு சங்கம் வளர்ப்போரே
சந்ததி ஒன்றுபட சங்கம் இங்கேது?
வாழ வேற்றுக் கிரகம் தேடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஜாதியே
மண்ணிலே
மலரவிடுமா? நீதியை

பூஜைக்குப் போகும் பூக்களில்
புனிதனவன் பேதம் பார்த்ததுண்டோ?
மழை, தென்றல்
தராதரம் தெரிந்து
தழுவுவதில்லை
வானம் தானே கூரை
பூமா தேவியவள் தாய்
ஐம்பூதங்களும்
ஐந்தறிவு ஜீவன்களும்
ஐக்கியப்பட்டிருக்கின்றன
உணர்ந்து கொள்ளுங்கள் - நாளைய
உலகம் உங்களை உதறி
உதாசீனப்படுத்தப் போகின்றது
வரலாற்றுப் பழியை
வருந்தி அழைப்போரே
நீங்கள் வார்த்த தீயில்
மாண்டு போவீர்கள்.

15.05.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்ந்தது புலன்(ங்)கள் மட்டுமல்ல......


அன்றொரு நாள்
வான்வழியே உன் பயணம் - என்
கான்வழியே கண்ணீரில் கப்பல்
மிதக்கிறது
வானம்
கறுப்புத் திரை போட்டது
கதிரவனும்
காலதாமதமாக வந்தான்
பயணப்பையை நீ
தூக்கிய போது
அதைவிட கனத்தது- உன்
மனமும் தான்
அடக்கிவைத்த உணர்வுகள்
அனல் போல் கொதித்தது
கண்ணீர்க் குடம்
கவிண்டு கொண்டது
இன்றோ
நீ மாதாமாதம் அனுப்பும்
டொலரிலோ, யூரோவிலோ
நீ படும் பாடு மறக்கடிக்கப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கடந்த தேசமொன்றில் - உன்
கண்ணீரை உலர்த்த
கரங்கள் இல்லை - முறையாக
உண்டாயோ
உறங்கினாயோ
உள்மனம் உறுத்தும்
பள்ளிக்கூட நாட்களும்
பட்சிகளாய் பறந்து திரிந்த
பசுமை நினைவுகளும்
பரவசம் ஊட்டும்
என்றோ ஒரு நாள்
மீண்டும் நாம் - தோழா
ஒன்றாக சுவாசிப்போம்.

09.03.2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் படைத்திடும் அஞ்சலி

காலத்தின் தேவையுணர்ந்து
பொழிகின்ற கார்மேகமே
வரண்ட தேசத்தினை வனப்பாக்கிட வந்த
சாதிமத பேதம் கடந்த புதுவெள்ளமே
இருள் நிறைந்த பொழுதினிலே
சுடரும் ஒளியே
அருள்நிறைஆசான்களின்
ஆசியுடனும் இளையவர்களின்
உள்ளுறை சக்திகட்கு
உரமிட்டு வேர்கொண்டு
விருட்சமாகி விழுதெறிந்து
வையகம் ஏற்றுப் போற்றிட வாழியவே.

12. 08. 2007

அஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாம்பல் மேட்டிலிருந்து ஒரு குரல்

விமர்சனங்களால் நான்
வீழ்வதே இல்லை –மாறாக
எழுந்து கொள்கிறேன்
வார்த்தைகளால் எரியூட்டிய போதும்
உயிர்த்து வருவேன்
சாம்பல்மேட்டு பீனிக்ஸ் பறவை நான் !

11.11.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்சாயிராம்



# கல்லும் சொல்லாதோ கவி.

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தைச் சேர்ந்த
கமலநாதன்-சுதர்சன்1989.05.09 இல் பிறந்தவர்.
தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில்ஆரம்பக் கல்வியையும்
ஹாட்லிக் கல்லூரியில்தனது இடைநிலைக் கல்வியையும்பெற்றுக் கொண்டவர்.
2008 ஓகஸ்டில் உயர்தர பரீட்சை எழுதி விட்டு
பெறுபேற்றிற்காகக் காத்திருக்கின்றார்.

ஹாட்லிக் கல்லூரியில் இவரது கவிதை முயற்சிகள் ஆசிரியர்களால் வளர்க்கப்பட்டன. அதிபர்.திரு.ந.தெய்வேந்திரராஜாவின் பல்துறைபட்ட செயற்பாட்டு விருத்தி முயற்சிகளில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்தும் தட்டிக் கொடுத்தும் பாராட்டி வருவதன் பெறுபேறுகளில் ஒன்றே இந்தக் கவிஞனின் உருவாக்கம். இத்தகையதொரு சூழலில் சுதர்சன் மட்டும் என்ன கல்லும் கவிபாடும் !

கவிஞர் சுதர்சன் ஆன்மீக ஈடுபாடு மிக்கவர். பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவின் தீவிர பக்தன்.பருத்தித்துறை சாயிமந்திர் இளைஞர் அணி உறுப்பினர். தும்பளை அஞ்சலியகத்தில் வண பிதா.டேமியன் அடிகளாரின் அன்புக்குரியவர். அஞ்சலி சஞ்சிகை வெளியீட்டில் முன்நின்று உழைப்பவர். கட்டுரை பேச்சு சிறுகதை நாடகம் என பல்துறை ஆர்வமுள்ளவர். முற்போக்குச் சிந்தனையும் சமூகக் கண்ணோட்டமும் பணிவும் கொண்டு புறப்பட்ட இந்த இளந்தென்றலால் மானிடத்தின் மகத்துவம் உயர வேண்டும் ; நிச்சயம் உயரும்.

பா.இரகுவரன்
ஆசிரியர்
யா| ஹாட்லிக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org